*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் ~ பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VI*, பதிப்பு *17* - ஏப்ரல் - ஜீன் 2019
*Formally UGC Approved Journal (64089), © Author*

# வெண்பாவின் ஈற்றுச்சீரும் ஈற்றயற்சீரும்

**முனைவர்.மு.கஸ்தூரி**
*உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை*
*தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரி, சென்னை*

***முன்னுரை***

*யாப்பு என்பது கருத்து வெளியீட்டுற்கான ஒலி ஒழுங்குப்பட்ட ஒரு புறவடிவம். வடிவத்தினும் உள்ளடக்கமாய் அமையும் பொருளே முதன்மை பெறத்தக்கது. எனினும் அப்பொருளைத் தாங்கிவரும் பாவடிவமான யாப்புக்கும் சிறப்பு ஏற்பட்டதை இலக்கண வரலாற்றின் மூலம் அறியமுடிகிறது. யாப்பிலக்கணம் காலந்தோறும் அடைந்துவந்த வளர்ச்சியின் அடையாளமாக இதனைக் கருதலாம்.*

*பா, பாவினம், இனவினம் என்று தமிழ் பாவடிவங்கள் வளர்ச்சிப் பெற்ற நிலையில் நால்வகை பாக்களில் ஒன்றாகக் கருதப்படும் வெண்பாவின் இலக்கணம் மட்டும் நெகிழ்வின்றி வரையறை பெற்ற வடிவமாகத் திகழ்கிறது. தமிழிலக்கியத்தில் வெண்பா வடிவிலான இலக்கியங்கள் அற நெறிகளை எடுத்துரைக்கும் தன்மையில் பொதுவாக அமைந்துள்ளது. எந்தப் பாவினுடைய இலக்கணத்தையும் தொல்காப்பியர் தொகுத்துக் கூறவில்லை. வெண்பாவின் இலக்கணத்தைத் தனித்துக் கூறாத தொல்காப்பியர், இயற்சீர்முன் நேரசைவரின் அது வெண்பா உரிச்சீர் ஆகும் (19) தன்சீர் உள்வழித் தளைவகை வேண்டா (55) எழுத்தெண்ணி வகுக்கும் அளவடியிற் சிந்தடியும் வெள்ளைக்குரிய (58) முடுகிவரும் ஐஞ்சீர் அறுசீர் எழுசீரடிகள் வெண்பாவில் வருவதில்லை (67) வெண்பா ஈற்றடி முச்சீர்த்தாகும் (72) ஈற்றுச்சீர் அசைச்சீராகும் (73), ஈற்றயற்சீர் நேரீற்றியற்சீராக இருப்பின் ஈற்றுச்சீர் நிரையாகவோ, நிரைபாகவோ இருக்கும் (74), ஈற்றயற்சீர் நிரையீற்றியற்சீராக இருப்பின் ஈற்றுச்சீர் நேராகவோ நேர்பாகவோ இருக்கும் (75) அகவல் அல்லாத ஓசை வெண்பாவிற்குரியது (83) எனப் பிற உறுப்புகளை விளக்குமிடத்தில் வெண்பாவின் இலக்கணத்தைக் கூறியுள்ளார்.*

*வெண்பாவின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற ஓரசைச்சீர் வாய்ப்பாட்டில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடிய வேண்டும் என்பது பிற்கால இலக்கணிகள் கூற்று.*

*ஆனால் செறிவு நிலையில் அமையும் வெண்பாவின் இலக்கணத்திலும் இலக்கணப் பிழைகள் நேர்ந்துள்ளதாகப் பதிவுகள் உள்ளன. உண்மையில் அவை பிழைகளா? என்பது ஆராய வேண்டியுள்ளது. பாரதி பாநிலை என்னும் நூலில் கா.மீனாட்சி சுந்தரனார் பாரதி வெண்பாவி*

லக்கணத்தை வேண்டுமென்றே பிறழ்ந்து பாடல்கள் பாடியுள்ளார் என்று கூறியுள்ளார். அவருடைய அப்பகுதி வருமாறு:

பாரதியார் கவிதைக்கலை நுட்பத்தை நன்கு அறிந்தவர். அவருக்கு யாப்புவகை அனைத்தும் தெரியும் ஆனால் சந்தத்தின் பொருட்டு யாப்பு விதியை வேண்டுமென்றே மீறுகிறார். எடுத்துக்காட்டாக கருணையுரு வானாள் என்று தொடங்கும் வெண்பாவின் கடைசி வரியைச் சொல்லலாம்.

வண்ணமுறு வான்குலிசம் தேரு

(பாரததேவியின் திருத்தசாங்கம் பாட்டு 7ன் கடைசி வரி)

வெண்பா விதிப்படி இறுதிச்சீர் தேர் என்றிருக்கலாம். பாரதி மட்டும் இவ்விதியை மீறவில்லை. முத்தொள்ளாயிரத்திலும் இத்தகைய வீதி மீறல்களைக் காண்கிறோம். தேரு என முற்றுகர ஈறாகக் கொண்டால் அங்ஙனம் முடிவதற்கு எடுத்துக்காட்டாக முத்தொள்ளாயிரப் பாடல் ஒன்றனைக் கூறலாம் திறந்திடுமின் எனத் தொடங்கி கண்ணாரக் காணக் கதவு என முடிகிறது. காரிகை, ஒழிபியல் மேற்கோள் ‘இன்பமலர்க் கோதா யிலங்குநீர்ச் சேர்ப்பன் புனைமலர்த் தாரகலம் புல்லு’ சான்றாகலாம். அண்மையில் வந்துள்ள மலிவுப் பதிப்பில் தேறு என வந்துள்ளது. இது குற்றுகர ஈறு பிழையில்லை. என்று கூறியுள்ளார். ஆனால் இவர் யாப்பருங்கலக்காரிகை, முத்தொள்ளாயிரப் பாடல்களைச் சான்றாகக் காட்டியுள்ளார். இருப்பினும் அது இலக்கணப் பிழை என்ற நிலையிலே பதிவுசெய்துள்ளார். யாப்பருங்கலக்காரிகையில் ஒழிபியல் பகுதியில் மேற்கோளாக வருவதாக இவர் குறிப்பிடும் அப்பகுதி செய்யுளியல் பகுதியில் இடம்பெற்றுள்ளது. மேலும் அதன் உரைப்பகுதி முற்றியலுகரத்திலும் வெண்பாவின் ஈற்றுச்சீர் முடியும் என்பதாக அமைந்துள்ளது. அப்பகுதி வருமாறு:

ஒளிசேர் பிறப்பு மொண்காசும் என்று சிறப்பித்தது காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டான் முற்றியலுகரம் ஈறாகிய நேரீற்றியற்சீர் இறுதியாகிய முச்சீரடியானும் இறுவனவு முள ஒருசார் வெண்பா வென்பது அறிவித்தற்கெனக் கொள்க.

வருமாறு:-

குறள்வெண்பா

மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவார்க் குருஉ

இது, பிறப்பு என்னும் வாய்பாட்டான் முற்றியலுகரம் ஈறாய் இற்ற வெண்பா.

இனமலர்க் கோதா யிலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு

இது, காசு என்னும் வாய்பாட்டான் முற்றியலுகரம் ஈறாய் இற்ற வெண்பா. இவை செய்யுளியலுடையார் காட்டியவெனக் கொள்க.

வெண்பாவின் ஈற்றுச்சீர் காசு, பிறப்பு என்ற நேர்பு, நிரைபு குற்றியலுகரத்தில் முடிய வேண்டும் என்ற பொதுநிலை முடிவு. தொல்காப்பியர் குறிப்பிடும் இருவகை உகரமும் உரியது என்பதற்கேற்ப வெண்பாவின் ஈற்றுச்சீர் குற்றியலுகரத்தில் மட்டுமன்றி முற்றியலுகரத்திலும் சில இடங்களில் முடிந்துள்ளதை வெண்பா இலக்கியங்களை ஆராய்ந்த நிலையில் பெறப்படும். ஆதலால் வெண்பாவிலான திருக்குறள் முதலாகப் பிற்கால நீதி இலக்கியங்கள், வெண்பாவில் அமைந்த காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் பிற்கால இலக்கியங்கள் பாரதி, பாரதிதாசன் வரையிலான படைப்புகள் வரை வெண்பாவின் ஈற்றுச்சீர் அமைப்பினை ஆராய்ந்து பார்க்கும் போது முற்றியலுகரத்தில் அமைந்துள்ள வடிவங்கள் இடம்பெற்றுள்ளதா என்பதை அறியமுடியும். இங்கு சில நூல்களை மட்டும் ஆராய்ந்துள்ளேன்.

வெண்பாவிற்கு ஈற்றடி முச்சீராகவும் ஈற்றுச்சீர் அசைச்சீராகவும் இருக்கும் என்ற தொல்காப்பிய இலக்கணங்கள் இக்காலம் வரை எவ்வித மாற்றமும் அடையாமல் உள்ளன. சங்க இலக்கியங்களில் வெண்பா வடிவம்

முழுமையான நிலையில் இடம்பெறவில்லை. எனினும் கலித்தொகையில் வெண்பாவிலான கூறுகள் இடம்பெற்றுள்ளது. அந்தப் பாடல்களை இங்கு காணலாம்.

யாம்நின் கூறவும் எமகொள்ளாய் ஆயினை
ஆனாது இவள்போல அருள்வந்தவை காட்டி
மேல்நின்று மெய்கூறும் கேளிர்போல் நீசெல்லும்
கானம் தகைப்ப செலவு
(கலி.1)

முல்லை இவைஆயின் முற்றிய கூழையாய்
எல்லிற்றுப் போழ்துஆயின் ஈதோளிக் கண்டேனால்
செல்என்று நின்னை விடுவேன்யான் மற்றுஎனக்கு
மெல்லியது ஓராது அறிவு
(கலி.117)

கலித்தொகையில் பாடலின் இடையிலும், இறுதியிலும் வெண்பா போன்று அமைந்துள்ள இப்பகுதிகள் வரும் ஈற்றுச்சீர்களைக் கவனிக்குமிடத்தில் அவை முற்றியலுகரமாக அமைந்திருப்பதைக் காணலாம்.

தொல்காப்பியர் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்ற நான்கசைகளையும் ஓரசைகளாகக் கொண்டவர். எனவே இந்நான்கு அசைகளும் ஈற்றில் சீராக நிற்கப் பெறும் என்பது தெளிவு. பின்வந்த காக்கைபாடினியார் வெண்பாவின் இறுதிச்சீர் அசைச்சீராக வரும் என்று கூறினார். ஆனால் இவர் நேர், நிரைகளைத் தனியசை, இணையசை என்று இரண்டாகப் பிரித்து கொண்டவர். இவர் நேர்பு, நிரைபு (காசு, பிறப்பு) அசைகளில் வெண்பா முடிவது குறித்து எடுத்துக் கூறியிருக்க வேண்டும். ஆனால் நூற்பாக்கள் கிடைக்காத நிலையில் அவர் கூறினாரா இல்லையா என்பது அறியதற்கில்லை. பின்வந்த யாப்பருங்கல ஆசிரியரும் கூறவில்லை. காரிகை ஆசிரியர் தான் இதனை தெளிவாகக் கூறுகின்றார்.

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இவற்றில் வெண்பா வடிவம் இடம்பெறவில்லை. இருப்பினும் கலித்தொகையில் வெண்பாவின் கூறுகள் இடம்பெற்றுள்ளது. பத்துப்பாட்டின் ஒவ்வொன்றுக்கும் பின்னும் இடம்பெறும் தனிப்பாடல்கள் வெண்பாவாலானவை. ஆனால் முழுமையான வடிவம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தான் இடம்பெறுகிறது. இலக்கியங்களில் வழங்கும் வெண்பா வடிவின் ஈற்றுச்சீர் பெரும்பாலும் குற்றியலுகரங்களைப் பெற்றபோதிலும் முற்றியலுகரங்களையும் பெற்றும் வந்துள்ளன. வெண்பாவில் அமைந்த இலக்கிய நூல்களில் முற்றிலுகரங்கள் பயின்றுவந்துள்ள இடங்களின் எண்ணிக்கை:

1. திருக்குறள் - 32
2. நாலடியார் - 10
3. பழமொழி - 13
4. இனியவை நாற்பது - 3
5. நான்மணிக்கடிகை - 4
6. சிறுபஞ்சமூலம் - 5
7. ஆசாரக்கோவை -4
8. திணைமாலை நூற்றைம்பது- 1
9. திணைமொழி ஐம்பது - 4
10. கார் நாற்பது - 3
11. கைந்நிலை - 3
12. ஏலாதி - 2
13. முத்தொள்ளாயிரம் - 2 (3,24)

இன்னாநாற்பது, களவழி நாற்பது, திரிகடுகம், ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, இன்னிலை ஆகிய நூல்களில் மட்டும் முற்றியலுகரங்கள் காணப்படவில்லை.

குற்றியலுகரத்தால் முடிவது சிறப்பு முற்றியலுகரத்தால் சிறுபான்மை முடியும் ஆனால் அது சிறப்பில்லை என்று உரைகள் தான் எடுத்துரைக்கின்றன. ஆனால் முற்றியலுகரத்தால் முடியும் சொற்கள் மிக அரிதாக உள்ள நிலையில் இலக்கியத்திலும் அதன் பயன்பாடு குறைவாகத்தான் இருக்கும். நச்சினார்க்கினியர் உரையில் குற்றியலுகரம், முற்றியலுகரம் சொற்களுக்கு எடுத்துக்காட்டு தரும்போது குறினெடி லொற்றின்பின் வந்த முற்றுகரம் உளவேற் காண்க என்று குறிப்பிட்டிருப்பது இங்கு

இணைத்தெண்ணத்தக்கது.
குற்றியலுகரம் - குறில் ஒற்று உகரம் - வண்டு
நெடில் ஒற்று உகரம் - பாம்பு
நெடில் உகரம் - நாகு
குறிலிணை உகரம் - வரகு
குறிலிணை ஒற்று உகரம் - குரங்கு
குறில் நெடில் உகரம் - மலாடு
குறில் நெடில் ஒற்று உகரம் - மலாட்டு
முற்றியலுகரம் - குறில் ஒற்று உகரம் - புல்லு
நெடில் உகரம் - தேரு
நெடில் ஒற்று உகரம் - வாழ்வு

குறிலிணை உகரம் - துணிவு
குறிலிணை ஒற்று உகரம் - புணர்வு
குறில் நெடில் ஒற்று உகரம் - உலாவு
குறில் நெடில் ஒற்று உகரம் - ?
என்பவற்றில் முற்றியலுகரத்தில் குறில்,நெடில் ஒற்று வந்த உகரம் என்பதற்கான சொல்லை எடுத்துக்காட்டாகக் கூடக் காட்டமுடியாத நிலையில் அது இலக்கியத்தில் சிறுபான்மை தான் வரும் என்பது பெறப்படும். ஆனால் முற்றியலுகரம் கொண்டு முடிவதால் வெண்பா இலக்கணம் பிழை என்ற முடிவுக்கு வருவதுதான் பிழை.

தொல்காப்பிய மரபின் படி இயலசை, உரியசை என்று இருவகைப்படும் இயலசையில் நேர்,நிரை என்பவை அடங்கும். உரியசையில் நேர்பு, நிரைபு என்பவை அடங்கும். பிற்கால இலக்கணிகள் நேர், நிரை என்ற இயல் அசைகளை மட்டும் கொண்டனர். உரியசையில் வழங்கும் நேர்பு, நிரைபு என்பவற்றைக் கொள்ளவில்லை. ஆனால் வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஓரசையில் அமையவேண்டும் என்ற இடத்தில் மட்டும் நேர்பு, நிரைபு என்ற அசைகள் வரும் என்று கூறி, வெண்பாவின் இலக்கணத்தைப் பிறழாது பாதுகாத்தனர். ஆனால் நேர்பு, நிரைபு என்ற பெயர் வடிவங்களைத் தராது நாள், மலர், காசு, பிறப்பு என்ற நால்வகை வாய்பாட்டில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடியவேண்டும் என்று பிற்கால யாப்பிலக்கணிகள் கூறினர். தொல்காப்பியர் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடியும் என்று குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பியரின் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்ற அசைகளின் பெயரே தெளிவான நிலையில் அமைந்திருக்க நாள், மலர், காசு, பிறப்பு என்ற நால்வகை வாய்பாடுகள் தோன்ற காரணம் நேர்பு, நிரைபு என்ற வாய்பாட்டு முறைமை வழங்கிழந்து விட்டதால் அதனை மீண்டும் பயன்படுத்த விரும்பாது இவ்வாறு புதுவகையில் பெயரை வழங்கினர் போலும். ஆனால் இந்த வாய்பாடுகள் சரியாக அமையாத நிலையைக் காணமுடிகிறது. தொல்காப்பியரின் நான்கு அசைகளே சரியானதாக அமைந்துள்ளது.

காசு, பிறப்பு என்பவை நேர்பு, நிரைபு என்ற இரு அசைகளின் மாற்று வடிவங்கள் என்ற நிலையில் இதுகாறும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் காசு, பிறப்பு ஆகிய இரு வடிவங்கள் நெடில் பின் வரும் உகரத்திற்கும், குறிலிணை ஒற்று உகரத்திற்கும் தான் வாய்பாடோடு ஒத்துப்போகும் நிலையில் உள்ளது. ஆனால் உகரத்தை ஈறாகக் கொண்டு வரும் அசைகள் குற்றியலுகரத்திற்கும், முற்றியலுகரத்திற்கும் வரும் முறைகளில் இவ்வாய்பாட்டைப் பொதுநிலையில் மட்டும் பயன்படுத்த இடமிருக்கே ஒழிய முழுமையான நிலையில் அமையவில்லை.

எடுத்துக்காட்டாக ‘இனிது’ என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். இனி + து நிரை+பு என்ற வாய்பாட்டில் சரியாகப் பொருந்தி வருகின்ற நிலையில் பிறப்+பு என்ற வாய்பாட்டோடு பொதுநிலையில் தான் பொருந்துகிறது. வாய்பாட்டோடு ஒப்பிட்டு பார்த்தால் குறிலிணை ஒற்றுக்கான சான்றாக மாறும் நிலை. ஆனால் உண்மையில் இச்சொல் குறிலிணை பின்வந்த உகரம் (பெரிது, கடிது, சிறிது, உருமு,களவு, அறிவு, துணிவு...).

'பட்டு' என்ற சொல்லை எடுத்துக் கொண்டாலும் இதே சிக்கல் உள்ளதைக் காணலாம். நேர்+பு என்ற வாய்பாட்டில் பொருந்திவருகின்ற நிலையில் கா+சு என்ற வாய்பாட்டோடு நெடில் பின்வந்த உகரமாக இச்சொல் உருப்பெறும். ஆனால் உண்மையில் இச்சொல் குறிலொற்று பின்வந்த உகரம் (தட்டு, கொண்டு, மின்னு,புல்லு...).

ஆனால் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்ற வாய்பாட்டு உருவாக்கத்தில் அடிப்படையில் தெளிவான வரையறைகள் உள்ள நிலையில் இவ்வகையான பெயரீடுகள் குழப்பமாக அமைகின்றன. தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய உரையாசிரியர்களும் வசதிகாகச் சில இடங்களில் ஒரே சொற்களைப் பயன்படுத்தி ஒரு வாய்பாட்டு அடிப்படையினை உருவாக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாக மாசேர்வாய், மாசேர்வரம், புலிசேர்வரம் முதலிய சிலவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் இவ்வகையான வாய்பாடுகள் பெருமளவில் பேசப்படவில்லை. நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டு குறிகளும் இது போலத் தோன்றியவையே. ஆனால் இவை காரிகையில் இடம்பெறுவதையொட்டிப் பள்ளியில், கல்லூரியில் பாடநூலாக இந்நூல் இருப்பதால் வெண்பாவின் ஈற்றுச்சீர் வடிவங்களாக நிலைபெற்று விட்டன.

தொல்காப்பியர் வெண்பாவின் இலக்கணத்தைக் கூறும்போது ஈற்றயற்சீர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் காய்ச்சீர் ஈற்றயற்சீராக வருவது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. பிற்கால இலக்கணிகள் ஈற்றயற்சீர் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. தொல்காப்பியர் காலத்தில் வெண்பாவின் ஈற்றயற்சீர் பெரும்பான்மையும் இயற்சீராக வந்திருக்க வேண்டும் அதனால் தான் அவர் அதற்கு மட்டும் இலக்கணம் செய்தார் போலும். காய்ச்சீர் வந்தால் நேர், நேர்பு என்பவை வரும் என்பதைக் குறித்துத் தொல்காப்பியர் எதுவும் குறிப்பிடவில்லை. நேர்பு, நிரைபு அசைகளை ஏற்காத நிலையில் தான் காய்ச்சீர் பயன்பாடு அதிக அளவில் உருப்பெற்றிருக்க வேண்டும். அதனால் தான் பிற்கால யாப்பிலக்கணிகள் வெண்டளை பிறழாது வருதல் வேண்டும் என்று பொதுநிலையில் இலக்கணம் செய்து காய்ச்சீராக வருதலையும் ஏற்றனர் என்பது தெளிவு.

வெண்பா இலக்கியங்களில் காய்ச்சீர் பயன்பாடு குறித்த எண்ணிக்கையினைச் சில நூல்களின் வழி காண்போம்.

150 கலியுள் 54 கலிகளின் ஈற்றடி முச்சீரடியாக உள்ளன. அவற்றுள்ளும் ஈற்றயற்சீர் காய்ச்சீராக அமைவது 4 மட்டுமே. இந்நான்கும் மருதனிளநாகனார் இயற்றிய மருதக்கலியுள் மட்டுமே இடம்பெற்றிருப்து குறிப்பிடத்தக்கது. திருக்குறளில் 145 இடங்களில் மட்டுமே காய்ச்சீராக உள்ளன. சிலப்பதிகாரக் காதைகளின் இறுதியில் உள்ள பதினைந்து வெண்பாக்களில் 8 வெண்பாக்களின் ஈற்றயற்சீராக காய்ச்சீர் உள்ளன. புறப்பொருள் வெண்பாமாலையில் 358 வெண்பாக்களுள் 83 வெண்பாக்களின் ஈற்றயற்சீர் காய்ச்சீராக உள்ளன. வெண்சீர் வெண்டளை முழுமையாக இடம்பெற்று ஏந்திசைச் செப்பலோசையில் அமையும் பாடலாகத் திருக்குறளில் யாதானு நாடாமல் ஊராமல் என்னொருவன் சாந்துணையும் கல்லாத ஆறு என்ற ஒரு பாடல் இடம்பெற்றிருப்பதும் இங்கு இணைத்தெண்ணத்தக்கது. தொல்காப்பியர் குறிப்பிடாத காய்ச்சீர் பயன்பாடு இலக்கியங்களிலும் குறைவாகத்தான் இடம்பெற்றுள்ளது.

நிறைவாக

இக்கட்டுரையில் வெண்பாவின் ஈற்றுச்சீர் குறித்தும் ஈற்றயற்சீர் குறித்தும் இலக்கண நூல்களில் உள்ள விடயங்களை எடுத்துக்கொண்டு அதனை வரலாற்று நிலையில் இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்த நிலையில் சில முடிவுகள் பெறப்படுகின்றன.

வெண்பாவின் ஈற்றுச்சீரில் நேர்பு,

நிரைபாக வரும் காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளில் குற்றியலுகரங்கள் வருவதுதான் மரபு என்று குறிப்பிடுவதும் முற்றியலுகரங்கள் வருவது இலக்கணப் பிழை என்று குறிப்பிடுவதும் தவறான ஆய்வு முடிவுகள். உண்மையில் முற்றியலுகரம் வருவது அரிது. இருவகை உகரமும் வரும் எனத் தொல்காப்பியம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

தொல்காப்பியர் குறிப்பிடும் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்ற வாய்பாடுகள் தெளிவாக இருக்க நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகள் தெளிவின்றி அமைந்துள்ளது. மேலும் வெண்பாவின் ஈற்றுச்சீர் குற்றியலுகரத்தால் மட்டும் தான் முடிய வேண்டும் என்பது போலக் காசு, பிறப்பு வாய்பாடுகள் அமைந்துள்ளது. ஆனால் தொல்காப்பியரின் நேர்பு, நிரைபு இருவகை உகரங்களையும் தனக்குள் கொண்டுள்ளது.

ஒன்றைக் குறிப்பதற்கு வாய்பாட்டைப் பயன்படுத்துங்கால் அது முன்னதைவிட மிகவும் தெளிவான நிலையில் அமைந்திருந்தால் அது உருவானதற்கான பயனைப் பெற்றுவிடும். தொல்காப்பியரின் நேர், நிரை, நேர்பு, நிரைபு கோட்பாடுகளே தெளிவாக இருக்கும் நிலையில் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகள் தேவையற்றது என்று தோன்றுகிறது. நேர், நிரை என்பவை எந்த அடிப்படையில் வரும் என்பதற்கு அடிப்படையைப் புரிந்து கொண்டால் நேர், நிரை, நேர்பு, நிரைபு என்ற வாய்பாடுகளில் காணப்படும் தெளிவு நாள், மலர், காசு, பிறப்பு என்பவற்றில் இல்லை என்பதை உணரமுடியும்.

வெண்பாவின் ஈற்றயற்சீர் காய்ச்சீராக வரவேண்டும் என்பதைத் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. அவருடைய அசை கோட்பாட்டில் மூவசைச்சீர்களான காய்ச்சீர் வருவது அரிதாக அமைந்துள்ளது. இந்நிலையில் அவர் இயற்சீர் வருவதை மட்டும் குறிப்பிட்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்:


1. அமிதசாகரனார், யாப்பருங்கலம் பழைய விருத்தியுரையுடன், மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.
2. அமிர்தசாகரனார், யாப்பருங்கலக்காரிகை மூலமும் குணசாகரர் உரையும், ந.மு.வேங்கடசாமி நாட்டார் செய்து தந்த திருத்தங்களுடன் கூடியது, கழகம், சென்னை. 20ஆம் பதிப்பு, 1996.
3. தொல்காப்பியர், தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், வெள்ளைவாரணன் (ப.ஆ), பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, முதற்பதிப்பு, 1989.
4. மீனாட்சிசுந்தரனார், கா., பாரதி பாநிலை, (தமிழாக்கம் - மு.மாணிக்கம்), விற்பனை உரிமை: மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர், முதற்பதிப்பு: ஏப்ரல் 1972.